1989 ஏப்ரல் 26]

ஸ்ரீரங்கம் கோவிலில் வடக்குப் பகுதியில் கோபுரம் கட்டுதல்.

132.—(*வினா எண்) 412,—திரு. பொன் விஜயராகவன்: மாண்புமிகு இந்துசமய அறநிலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் கோவில் நிர்வாகம் அந்தக் கோவிலின் வடக்குப் பகுதியில் கோபுரம் கட்டுவதற்கு அரசிடம் அனுமதி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அக்கோரிக்கை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவரங்கம் திருக்கோயிலின் வடக்குப் பகுதியில், முன்காலத்தில் கட்டப்பட்டு, கல்காரத்துடன் முற்றுப் பெறாது நின்று போன மொட்டை கோபுரத்தின் மீது ஏழு நிலைகள் கொண்ட வடக்கு ராஜகோபுரம் கட்டுவதற்கு அனுமதி கோரி அஹோபிலமடம் தவத்திரு ஜீயர் சமர்பித்த விண்ணப்பம் தற்போது அறநிலையத் துறை ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் திருக்கோயில் 4 பகுதி சுற்றுப் பிரகாரம் உள்ள ஒரு கோயில். அதன் கடைசி பிரகாரத்தில் நான்கு மொட்டை கோபுரங்கள் இருந்தன. அதில் ராஜ கோபுரத்தை ஸ்ரீ ஜீயர் சுவாமிகள் கட்டிமுடித்துவிட்டார். அதில் கூட அமைச்சர் அவர்கள் ஏதோ தவறுதல் இருக்கிறது என்று அறிக்கை மூலம் சொன்னார். நான்கூட பதிலில் சொன்னேன். அதைத் தவிர்த்து 3 கோபுரங்கள் இப்போது மொட்டைக் கோபுரங்களாக இருக்கின்றன. அதில் ஒரு கோபுரத்தைக் கட்டுவதற்காக எல்லோரும் சேர்ந்து ஸ்ரீ ஜீயரை அணுகி 'நீங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று கேட்டதற்கு, இப்போது அனுமதி கேட்டிருக்கிறார். அதைத்தவிர்த்து பாக்கியாக உள்ள கிழக்கு வாசல் மற்றும் மேற்கு வாசல் கோபுரங்கள் மொட்டைக் கோபுரங்கள் என்ற நிலையிலேயே இருக்கின்றன. அவற்றையும் சேர்த்துக் கட்டுவதற்காக அரசு பரி பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெற்கு கோபுரம் கட்டுவதில் தவறு நடந்ததாக நான் இங்கே சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர்

திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். நான் அதை மீண்டும் சொல்லுகிறேன். அங்கே ஒரு கோடியே 9 லட்சம் ரூபாய் செலவில் அந்தத் தெற்குக் கோபுரம் கட்டு வதற்கு ஆணையர் அனுமதி அளித்தார். அதற்குத் தமிழக அரசும் பணம் கொடுத்தது. ஆந்திர அரசு மற்றும் கருநாடக அர சிடமிருந்தும் பணம் வந்தது. பொதுமக்களும் நன்கொடையாகக் கொடுத்தார்கள். ஆனால், அந்தக் கணக்கு இன்னும் ஆணை யருக்குக் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து கொண்டே இருக்கிறது. அதற்குப் பிறகு வடக்கு கோபுரம் கட்டுவதற்கு ஏறக்குறைய 20 லட்சம் ரூபாய் செலவில் அனுமதி தரப்பட்டிருக்கிறது. அதைக் கட்டி முடித்த பிறகு, கிழக்கு மற்றும் மேற்கு கோபுரங்களைப்பற்றி யோசிக்கலாம்.

(திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தொடர்ந்து கேள்விகள் எழுப்ப வாய்ப்பில்லை. இது விவாதம் அல்ல.

விவசாயிகளுக்கு நிவாரண நிதி.

133—*வினா எண். 801)—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்,— திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வறட்சி, வெள்ளம், புயல் போன்றவைகளினால் விவசாயி களுக்கு இழப்பு ஏற்படும்போது அந்த இழப்பை ஈடு செய்வதற்கு விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்கும் திட்டம் செயல்படுத் தப்படுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இயற்கை சீற்றங்களினால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டு, கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன்கள் வசூல் செய்ய இயலாமல் போனால், அக்கடன் நிலுவைகளை தள்ளுபடி செய்து நிவாரணம் அளிக்கும் வகையில் வேளாண்மைக் கடன் நிவாரண நிதி ஒன்றினை அரசு 31–10–1964 முதல் நிர்வகித்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நாம் ஏற்கெனவே அவர்களுக்குக் கொடுத்த கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கிறோம். ஆனால், புயல், வெள்ளம் போன்ற இம்மாதிரியான இயற்கை சீற்றங்கள் காரணமாகப் பாதிக்கப்படுகிறபோது—அதாவது புயல் வந்தால் ஏழை எளிய விவசாயிகளின் கூறை பிய்ந்து போய்விடுகிறது— வறட்சி வந்தால் மரங்கள் எல்லாம் பட்டுப்போய் விடுகின்றன—